# “. . . வேளை வந்தது” யோவா 12 : 23

## சித்தமும் வேளையும்

தேவனிடத்தில் எந்தக் காரியத்தைக் கேட்டாலும், ஜெபத்தின் முடிவில் ஆண்டவரே, நான் கேட்ட இந்தக் காரியம் உமக்குச் சித்தமானால் வாய்க்கப்பண்ணும் என ஜெபிக்க வேண்டும். ஏனெனில், அநேக காரியங்கள் நமக்கு நல்லது போல் தெரியும். ஆனால் தேவனுக்கும் அது பிரியமாயிராது. சில காரியங்கள் நமக்கு வேண்டாமென்பது போல் தெரிவது, கர்த்தருக்கு மிகப் பிரியமாக இருக்கும். ஆதலால் நம்முடைய ஞானம் மிகக் குறைவாக இருக்கிறபடியால், எதைக் கேட்டாலும அவருடைய சித்தத்தின்படி செய்ய முடிவில் ஒப்புக் கொடுப்பது மிகச் சிறந்ததாகும். ஆவிக்குரிய வாழ்க்கையில் குழந்தைகளாக இருப்பவர்களுக்கே இதை எழுதுகிறேன். ஏனெனில் நானும் இன்னும் உங்களைக் காட்டிலும் மிகச் சிறிய குழந்தையாகவே இருக்கிறேன். **“தேவனுடைய சித்தம் இதுதான்”** என திட்டமாக முடிவு செய்து, செயல்பட்டு, தோல்வியைக் கண்ட அநேக சம்பவங்கள் என்னுடைய வாழ்க்கையில் உண்டு.

இது அத்தியாவசிய தேவை, இது கட்டாயம் நடைபெற வேண்டும், இதன் மூலம் நிச்சயமாக தேவனுடைய நாமம் மகிமைப்படும் என்று நீங்கள் நம்புகிற காரியத்தையும் தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்க வேண்டும் என ஆலோசனையாக எழுதுகிறேன்.

ஏனெனில், வெளிநாட்டில் ஒரு மைதானத்தில் 5 பேர் கூடி ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது, ஒருவருக்கு தரிசனம் கிடைத்தது. இதே தரிசனம் 5 பேருக்கும் ஒன்றன்பின் ஒன்றாக கிடைத்தது. தரிசனத்தின்படி 5 பேருமே குறிப்பிட்ட தீவுக்கு சுவிசேஷம் அறிவிக்கச் செல்வதாக சபையில் அறிவித்தார்கள். அப்பொழுது அனுபவமுள்ள போதகர் சொன்னார். நீங்கள் சொன்ன தீவில் ஆட்களே கிடையாது; ஆதலால் போக வேண்டாம். நன்றாக ஜெபித்து தேவனுடைய திட்டத்தை அறியுங்கள் என்பதாக. ஆனால் அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட தீவுக்குச் சென்றார்கள். ஒரு ஆட்களையும் காணாமல் வெறுமையாக, ஏமாற்றத்துடன் வெட்கத்துடன் திரும்பி வந்தார்கள். அநேக நேரங்களில் நமது சுய விருப்பமும், திட்டமும் தரிசனம் போல் வெளிப்படும். முடிவு தோல்வியாகி விடும்.

இதை ஆவலுடன் வாசிக்கும் அருமையான சகோதரனே, சகோதரியே,

**“நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டு மென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது”** **1 தெச 4 : 3.** ஆதலால், இந்த உலகத்தின் எந்த ஆசீர்வாதமும், உங்களுடைய பரிசுத்த வாழ்க்கைக்கு இடறலாக இருக்குமானால் அதை வெறுத்து தள்ளுங்கள்.

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும். **மத். 6 : 33.** தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்பும் அல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோஷமாயிருக்கிறது. **ரோமர் 14 : 17.**

இரண்டாவதாக, கர்த்தருடைய சித்தம் என்று, ஒரு காரியத்தை நீங்கள் நிச்சயித்துக் கொண்டாலும், அதன் வேளைக்காக காத்திருங்கள். கர்த்தருடைய சித்தமாக இருந்தாலும் கூட, சில காரியங்கள் நடைபெற பல வருடங்கள் ஆகலாம். சில மாதத்துக்குப் பின்பும் நிறைவேறலாம். ஆதலால், அவருடைய வேளைக்காகக் காத்திருக்க வேண்டும். “ஏற்ற வேளையில் ஆகாரத்தைத் தருவீர் என்று திமிங்கிலங்கள் உம்மை நோக்கிக் காத்திருக்கும்” **சங்கீ. 104 : 27** என சங்கீதக்காரன் கூறுகிறான்.

**இயேசு கூறுகிறார்,**

யோவான் 7 : 6,8 ல் : “என் வேளை வரவில்லை” என்பதாக. ஆனால் யோவான் 17 : 2 ல் பிதாவே “வேளை வந்தது” என்பதாக. அல்லேலூயா.

இதை எதிர்பார்ப்புடன் வாசிக்கும் அன்பரே,

“**வேளை வந்தது**” என்று இயேசு கூறுகிறார். இந்த இரண்டு வார்த்தைகளையும் இன்று உங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுங்கள். எத்தனையோ நாட்கள் கண்ணீருடன் ஜெபித்தீர்கள். பதில் இல்லை. ஆனால் ஒரு நாள் முடிவு உண்டு என்று விசுவாசித்தீர்கள். அது “இந்த நாளே” உங்கள் கண்ணீர் யாவையும் கர்த்தர் துடைக்கும் “**வேளை வந்தது**” அல்லேலூயா. குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு கர்த்தரின் வேளை வந்தது. வராமல் இருந்த பணம் வரும்படியான “**வேளை வந்தது**” உங்கள் சத்துருக்களும் உங்களோடு சமாதானமாகும்படியான “**வேளை வந்தது**” சங் 119 : 126 கூறுகிறது, “நீதியை செய்ய கர்த்தருக்கு **வேளை வந்தது**” என்பதாக.

நீதி கிடைக்காமல், தடுமாற்றம் அடைந்து, நொறுங்கிப் போன சகோதரனே, சகோதரியே உன் மூலம் “மனுஷ குமாரன் மகிமைப்படும்படியான **வேளை வந்தது**” யோவான் 12 : 23 ஆமென்.

கர்த்தர் உனக்கு தயை செய்கிற படியால் உன் இருதயம் ஆழத்திலிருந்து ஸ்தோத்திர பலியிட்டு, சாட்சியிலும் உன் பொருளாலும், காணிக்கையினாலும் கர்த்தரைக் கனம் பண்ணும் “**வேளை வந்தது**” அல்லேலூயா! கர்த்தருக்கே மகிமை.